முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்

**O.S No.170/2013**

**Witness PW 1**

பெயர்:பத்மினி அம்மாள்

க/பெ.:

இன்று (01/04/2025) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கு சொத்துகள் கண்டமங்கலதில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண். 131/2 , விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 90 அடி நீலமும், 42 அடி அகலமும் ஆகும். 1ம் பிரதிவாதி செண்பகம் என்பவர் எனது மூத்த சகோதரி. அவர் எனக்கு அக்கா. வழக்கு சொத்துகள் பூர்வீக சொத்துகள், தாத்தா மஞ்சினி கவுண்டர் சொத்து ஆகும். மஞ்சினி கவுண்டர் என் தந்தைக்கு ஆவணம் எழுதி வைத்துள்ளார். எனது அப்பா அவரது சகோதரர்களுடன் சொத்தை பாகம் பிரித்துக்கொண்டார். என் தந்தை இறந்த பிறகு தாவா சொத்துகள் என் தாயாரிடம் உள்ளது. வழக்கு சொத்துகள் யார் அனுபவத்தில் உள்ளது என்றால் என் அம்மா இறந்து 15 வருடம் சொத்து என்னிடம் இருந்தது, தற்போது 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதியுள்ளார். செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய விவரம் 16/03/2013ல் எனக்கு தெரிய வந்தது. முதன்மை உறுதிக்கூட்டில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் 14/05/1996 தேதியிட்ட விடுதலை பத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது மாதிரி தெரியவில்லை. வா.சா.ஆ.5 என்பது நான் கொடுத்த பத்திரிக்கை விளம்பரம். அதில் வழக்கு சொத்தின் புல எண் உள்ளது. 1ம் பிரதிவாதி செண்பகம் 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் செய்துவிட்டார் என்றால் எங்களுக்கு தெரியாமல் செய்துவிட்டார். செட்டில்மெண்டிற்கு பிறகு 2ம் பிரதிவாதி தான் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்தை 2ம் பிரதிவாதி அடைந்து தனிப்பட்ட முறையில் உரிமையாளர் என்ற முறையில் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. கடந்த 14/05/1996 தேதியில் முதல் பிரதிவாதியிடமிருந்து தலா ரூ.2,50,000/- பெற்றுக்கொண்டு சொத்துகளை பொறுத்து கஸ்தூரி, பத்மினி, சந்திரா ஆகியோர்கள் விடுதலை ஆவணம் முதல் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி இவ்வாறு

கடந்த 1996ம் ஆண்டு தாவா சொத்தை அடைந்து உரிமையாளர் என்ற வகையில் அனுபவம் செய்து வந்து அதை 2ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் மூலம் உரிமை மாற்றம் செய்துவிட்டார் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய உடனேயே வழக்கை தாக்கல் செய்துவிட்டோம். முதல் பிரதிவாதி பெயரில் நாங்கள் விடுதலை ஆவணம் கடந்த 1996ம் ஆண்டிலேயே எழுதிக்கொடுத்துவிட்ட நிலையில் 17 வருடங்கள் கழித்து இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும், காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. 3வது அயிட்ட சொத்தில் கண்டமங்கலம் பஞ்சாயத்திற்கு பாத்தியப்பட்ட சிமெண்ட் ரோடு செல்கிறது என்றால் சரிதான். பஞ்சாயத்து இவ்வழக்கில் அவர் அவசிய தரப்பினராக இந்த வழக்கில் காட்டி சேர்க்காததால் வழக்கு அவசிய தரப்பினர் இன்றி பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4வது அயிட்ட சொத்தை பொறுத்து சிங்கார கவுண்டர் என்பவர் அவசிய தரப்பினராக உள்ள நிலையில் அவரை கட்சி சேர்க்காததால் வழக்கு அவசிய தரப்பினர் இன்றி பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**(Sd/-C.R.Gowthaman)**
**Principal Subordinate Judge ,**
Villupuram